Lakeridge Health

ஏப்பிரல் 13, 2021

அன்பார்ந்த நண்பர்கள் மற்றும் அயலவர்கள் அறிவது,

எமது சமூகத்தின் மத்தியில் கோவிட்-19 நோய் பரவ விடாமல் தடுப்பதற்கு நீங்கள் எடுத்து வரும் எல்லா முயற்சிகளுக்கும் நாங்கள் நன்றி கூறுகிறோம். துரதிஷ்டவசமாக இந்நோய் தொடர்பில் மூன்றாவதாகத் தோன்றியுள்ள அவசரகால நிலைமையும் அதனைத் தொடர்ந்து வந்துள்ள மாகாண அரசின் வீட்டில்-தங்கி-விடுங்கள் என்ற உத்தரவும் எம்மை ஓர் இக்கட்டான சூழ்நிலையில் நிறுத்தி வைத்துள்ளன.

சிந்தியா டேவிஸ்
தலைவர் & பிரதம நிர்வாக அதிகாரி

கலாநிதி. ரோனி ஸ்ரோன்
பணியாளர் குழுத் தலைவர்

இந்த நோய் வைரசுக் கிருமியை ஒரு கட்டுப்பாட்டுக்கு உள்ளே கொண்டு வருவதற்காக மாகாண அரசின் அறிவுறுத்தல்களை நாங்கள் முன்பு எப்பொழுதும் இல்லாத அளவுக்கு எல்லோரும் சேர்ந்து கூட்டாகப் பின்பற்ற வேண்டிய அவசியம் எமக்கு உள்ளது.

எமது வைத்தியசாலைகளில் உள்ள நெருக்கடி நிலைப் பராமரிப்பு வசதிகளுக்கு மிகவும் அதிகரித்த அளவில் தேவையின் அழுத்தம் உருவாகி உள்ளது. ஒன்ராறியோ மாகாணத்தில் கோவிட்-19 நோயினால் பாதிக்கப்பட்டோரின் எண்ணிக்கை மிகக் கூடிய அளவில் இப்பொழுது இருப்பதுடன் நோய்க்கான வைரசு சமூகங்களில் மிகப் பரவலாகத் தொற்றி வருவதை காண முடிகிறது. இப்பெரும்புல நோய் தோன்ற ஆரம்பித்த பின்னர் எந்த ஒரு கட்டத்திலும் இல்லாதவாறு இப்பொழுது நெருக்கடி நிலையுடன் வைத்தியசாலையில் அனுமதிக்கப்படுவோரின் எண்ணிக்கை இம்மாகாணத்தில் மிக அதிகமாக உள்ளது. இங்குள்ள எமது Lakeridge Health அமைப்பைச் சூழ்ந்த சமூகத்தில், நோய்த் தொற்று அலை 1 மற்றும் 2 நிகழ்ந்த காலங்களில் எந்த ஒரு சந்தர்ப்பத்தில் இருந்ததைக் காட்டிலும் இன்று டூறாம் பகுதியில் நெருக்கடி நிலைப் பராமரிப்பு மற்றும் மருத்துவ காரணங்களால் அனுமதிக்கப்படுவோரின் எண்ணிக்கை உயர்வாக உள்ளது. இவ்வாறாக அனுமதிக்கப்படுவோரின் எண்ணிக்கை திகிலூட்டும் விதத்தில் தொடர்ந்து ஏறிக் கொண்டு வருகிறது.

ஆனாலும், இப்பெரும்புல நோயினால் உண்டாகியுள்ள தாக்கத்தின் தீவிரம் கடுமையாக உள்ள போதிலும் பிரச்சினைகளுக்கு நாம் தீர்வுகளை தொடர்ந்து கண்டுபிடித்து வருகிறோம். எமது பணியாளர்களும் வைத்தியர்களும் ஒவ்வொரு நாளும் கடமைக்கு வந்து உயர் தரமான, பாதுகாப்பான ஆரோக்கிய பராமரிப்பினை கருணையுடனும் அன்பாகவும் செய்து வருகின்றனர். அவர்கள் தம் சொந்த வாழ்வில் பெற்றோர்களாக, வாழ்க்கைப் பங்காளர்களாக, கூடிப் பிறந்தோராக, மகன் மகள்களாக இருந்தபோதிலும் சிரத்தையுடன் இதனையும் செய்யத் தவறுவதில்லை. ஒன்ராறியோவில் உள்ள வைத்தியசாலைகள் யாவும் ஒரு முழுத் தொகுதியாக ஒன்றுபட்டு பணிபுரிந்து வருகின்றன. தேவை ஏற்படுகையில் அவற்றுக்கு இடையில் மூலவளங்கள் பங்கிடப்படுகின்றன. நோயாளர்கள் இடம் மாற்றப்படுகின்றனர். இவற்றுடன் நாங்கள் எமது உள்ளூர் ஆரோக்கிய சேவைப் பங்காளர்களுடன் சேர்ந்து செயற்பட்டு, டூறாம் பிரதேச வதிவாளர்களில் முடிந்த அளவு அதிகமானோர் இயன்ற அளவு வேகத்தில் தடுப்பூசி மருந்து பெறுவதற்கு உதவியும் வருகிறோம்.

உடனடியான அவசரகால மருத்துவ பராமரிப்பினை வழங்கும் எமது திறனையும் நாம் உறுதி செய்கிறோம்

இப்பெரும்புல நோயின் நிலைமை விரைவாகப் பரிணாமம் அடைந்து வரும் இச்சமயத்தில், Lakeridge Health அமைப்பு நோயாளர்கள், குடும்பங்கள் மற்றும் பணியாளர்களின் பாதுகாப்பினை உறுதி செய்வதற்காக அவ்வப்போது சந்தர்ப்பத்துக்கு ஏற்றவாறான உடன் முடிவுகளையும் எடுத்து வருகிறது.

இக்கால கட்டத்தில் அவசரகால நிலைமைக்குரிய சத்திர சிகிச்சைகள் தொடர்ந்து நடைபெறுகின்றன. அத்துடன் புற்றுநோய்க்கான சத்திர சிகிச்சைகள் போன்று அவசரகால நிலையில்லாத ஆனால் முன்னுரிமை வழங்கப்பட்ட மற்றும் காலத்தால் தீவிரம் பெறும் சத்திர சிகிச்சைகளும் தொடருகின்றன.ஆனாலும் உடனடியான மற்றும் அவசர கால பராமரிப்பினை வழங்கும் எமது பராமரிப்பு வசதிகளைப் பாதுகாத்துக் கொள்வதற்காக, அவசரம் அற்ற மற்றும் அவசரகால நிலைமையின் கீழ் அடங்காத சகல சேவைளையும் கட்டுப்படுத்தி ஆற்றி வருகிறோம். இவ்வாறாக மெதுவாகக் குறைக்கப்படும் எமது பணிகளில் X-கதிர் படங்கள் எடுத்தல், இரத்தப் பரிசோதனை வேலை, புனர்வாழ்வு சிகிச்சைகள் மற்றும் வெளிக்கள நோயாளருக்கான மருத்துவ செயற்பாடுகள் அடங்குகின்றன.

இவ்வாறு செய்வதன் மூலம் நாம் எமது வைத்திய சாலைகளில் பராமரிப்புக்கான சேவை வசதிகளின் வெற்றிடத்தை கூட்டி வருகிறோம். இப்பொழுது எம்மிடம் உள்ள நோயாளர்களுக்கும் இனிவரும் வாரங்களில் நாம் சந்திக்க நேரிடும் என்று எதிர்பார்க்கும் நோயாளர்களுக்கும் போதிய அளவான வெற்றிடமும் பணியாளர்களும் இருப்பதை இது உறுதி செய்யும்.

தொடருகிறோம்	கட்டுப்படுத்துகிறோம்
• அவசரகால நிலை மற்றும் உடனடித் தேவை நிலையில் உள்ள சத்திர சிகிச்சைகள். • முன்னுரிமை வழங்கியுள்ள அவசரகால நிலைச் சத்திர சிகிச்சைகள் மற்றும் காலத்தால் தீவிரம் அடையக்கூடிய சத்திர சிகிச்சைகள், உதாரணம்: புற்றுநோய் சத்திர சிகிச்சைகள்.	• உடனடித் தேவையற்ற மற்றும் அவசரகால நிலையில் இல்லாத சேவைகள். உதாரணம்: இடுப்பு எலும்பு பரிமாற்றம். • X-கதிர் படங்கள். இரத்தப் பரிசோதனை, புனர்வாழ்வு மற்றும் இவைபோன்ற வெளிநோயாளர் சேவைகள்.

உடனடித் தேவையில்லாத மற்றும் அவசரகால நிலை இல்லாத சேவைகளை பொதுவாகக் குறைக்கும் இச்செயல், மக்களில் பலருக்கு அவர்களின் திட்டங்களைக் குலைக்கும் ஒன்றாக இருக்கும் என்பதை நாம் அறிவோம். அவ்வாறு இருப்பினும் நாங்கள் எமது சேவை வசதிகளின் தேவையை நினந்தோறும் மதிப்பிட்டு வருகிறோம். முன்கூறியவாறான சேவைகளை நாம் விரைவில் மீண்டும் ஆரம்பிக்க முடியும் என்று நம்புகிறோம்.

நோய்தடுப்பு மருந்து பெறும் சந்திப்புக்குப் பதிவு செய்யுங்கள்

மாகாண அரசின் வீட்டில்-தங்கி-விடுங்கள் என்ற உத்தரவின்படி, ஒவ்வொருவரும் அத்தியாவசிய தேவைகளுக்கு அல்லாது வீட்டில் தங்கி விடவேண்டும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. அத்தியாவசிய தேவைகளுக்கு உதாரணங்கள்: பலசரக்குக் கடை அல்லது மருந்தகத்துக்கு போய் வருதல், ஆரோக்கிய பராமரிப்புச் சந்திப்புக்களுக்கு செல்லுதல், வீட்டுக்கு வெளியே அப்பியாசம் செய்தல் மற்றும் தூர இடத்தில் இருந்து செய்ய முடியாமல் உள்ளவாறாகப் பாடசாலைக்கு அல்லது வேலைக்கு செல்லுதல் போன்றவை . இவ்வாறான அறிவுறுத்தல்களைப் பின்பற்றுங்கள் என்று உங்களுக்கு நாம் கூற விரும்புகிறோம்.

நோய்த் தடுப்பு மருந்து பெறுவதற்குரிய உங்களுக்கான தகைமைக் காலம் வந்தவுடன் நீங்கள் தடுப்பு மருந்தினை எடுத்துக் கொள்ளுங்கள் என்று உங்களைக் கேட்டுக் கொள்கிறோம். இப்பொழுது நிலவும் இப்பெரும்புல நோயினை எதிர்த்துப் போராடுவதற்கு தடுப்பு மருந்து ஏற்றுவது மிகவும் முக்கியமாக உள்ளது. தடுப்பு மருந்தினை எடுப்பதற்கு யார் தகைமை பெறுகின்றமை மற்றும் அதனை எடுக்கும் சந்திப்புக்கு எப்படிப் பதிவு செய்வது போன்றவை பற்றிய மேலதிக தகவல் பெறுவதற்கு

durham.ca/vaccineappointment என்ற இணையத்தளம் சென்று பாருங்கள். இதற்கு மேலாகவும் தடுப்பு மருந்து பற்றிய தகவல் durham.ca/covidvaccines என்ற இணையத்தளத்தில் இருப்பதை காணலாம்

நோயுக்கான அறிகுறிகள் காணப்படும் ஒருவராக நீங்கள் இருந்தால் கோவிட்-19 நோய்ப் பரிசோதனை ஒன்றுக்கு பதிவு செய்யுங்கள்

கோவிட்-19 நோய்க் கிருமிக்கு நீங்கள் உள்ளாகி இருக்கக் கூடும் என்ற ஒரு சாத்திய நிலை உண்டு என்றால், தயவு தாமதம் செய்யாமல் உங்களைப் பரிசோதித்துக் கொள்ளுங்கள். நீங்களோ அல்லது உங்கள் வீட்டில வசிப்போரில் யாராவதோ சுகவீனமான ஓர் உணர்வினைக் கொண்டு இருந்தால், உடனடியாக Covidswab.lh.ca. என்ற இணையத்தளம் சென்று கோவிட்-19 நோய்க்கான பரிசோதனைக்குப் பதிவு செய்யுங்கள் என்று அறிவுரை கூறுகிறோம்.

கோவிட்-19 நோயுக்கான பரிசோதனையைப் பின்தள்ளிப் போடுவதனால் உங்களுக்குத் தெரியாமலே நீங்கள் குறித்த நோயின் வைரசுக் கிருமியை மற்றவர்களுக்குப் பரப்பும் ஆபத்துக்கு உள்ளாவீர்கள். உங்களுக்கான பரிசோதனைச் சந்திப்பு ஒழுங்கு செய்யப்பட்ட பின்பு, உங்கள் பரிசோதனை முடிவு உங்களுக்கு வரும் வரையில் தயவுசெய்து உங்களை நீங்களே தனிமைப்படுத்திக் கொள்ளுங்கள். சோதனை முடிவுகளை அறிவதற்கு முன்பாகத் தற்செயலாகவும் இந்த வைரசுக் கிருமியை நீங்கள் பரப்ப நேரிடலாம். இதற்கான பரிசோதனை இலகுவானது; விரைவானது. நீங்கள் பரிசோதனைக்கென்று தெரிவு செய்வதற்கு டூறாம் பிரதேசத்தில் பல பரிசோதனை ஸ்தலங்கள் உள்ளன. இவ்வாறான ஸ்தலங்களை அறிவதற்கு www.lh.ca என்ற இணையத் தளம் சென்று பாருங்கள்.

பாதுகாப்பு எடுக்கும் உங்கள் கவனம் குறைய விடவேண்டாம்

தயவு செய்து பொதுசனங்களுக்குரிய ஆரோக்கிய வழிநடத்தும் நடைமுறைகளை தொடர்ந்து பின்பற்றுங்கள். தவறாமல் உங்கள் கைகளைக் கழுவுதல், உங்கள் வீட்டு வதிவாளர் சூழலுக்கு வெளியே முகக் கவசம் ஒன்று அணிதல், ஒருவருக்கு ஒருவர் உடல் ரீதியாக இடைவெளி விட்டு புழங்குதல் ஆகியன இவற்றில் அடங்கும். இப்பெரும்புல நோயின் ஆரம்பகால தொற்று அலைகளின் பொழுது ஒன்றாக நாம் இணைந்து எடுத்த முயற்சிகள் நல்ல மாற்றத்தை ஏற்படுத்தின. நோயின் வளர்ச்சியைக் குறித்த வரைபடக் கோட்டினை வளைப்பதில் நாம் வெற்றி கண்டோம்.

இந்த முறையும் அவ்வாறு செய்வீர்கள் என்று உங்களில் நாம் நம்பிக்கை வைத்து இருக்கிறோம். மீண்டும் இதில் நாம் வெற்றியடைவோம் என்பது எங்களுக்குத் தெரிகிறது!

வீட்டில்-தங்கி-விடுங்கள் என்ற உத்தரவின் கீழ், அடுத்து வரும் நான்கு வார காலத்தின் பொழுது நீங்கள் ஆற்றும் செயல்களும் எடுக்கும் முடிவுகளும் மிகவும் முக்கியமானவையாக உள்ளன. எமது சமூக ஆரோக்கியத்தின் நிலைமையை அவை நேரடியாகப் பாதிக்கும்.

எமது வார்த்தைகளை நீங்கள் கவனத்தில் எடுப்பதற்கும் அதைவிட முக்கியமாக அவற்றின்படி நடந்து கொள்வதற்கும் உங்களுக்கு நன்றி கூறுகிறோம். Lakeridge Health அமைப்பு இரவு பகலாகப் பணிபுரிந்து உயிர்களைக் காப்பாற்றி, மக்களுக்கு ஆறுதல் வழங்கி எமது சமூகத்தினை ஆரோக்கியமாக வைத்திருப்பதில் கவனம் செலுத்தி வருகிறது. தயவு செய்து நீங்களும் உங்கள் பங்கினைச் செய்து எமது முயற்சிக்கு ஆதரவு தாருங்கள்.

மிகுந்த மரியாதையுடன்,

சிந்தியா டேவிஸ்
தலைவர் & பிரதம நிர்வாக அதிகாரி
Cynthia Davies
President & CEO

கலாநிதி. ரோனி ஸ்ரோன்
பணியாளர் குழுத் தலைவர்
Dr. Tony Stone
Chief of Staff